## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 204/2018**

திருமதி. தேவி (D.W –1) **07.10.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து வீடு என்றால் சரி. தாவா சொத்து 1ம் வாதி ரேவதிக்கு கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து ஒன்றாம் வாதி ரேவதி பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. நான் பொது அதிகார ஆவணம் தான் ஏற்படுத்தினேன். தாவா சொத்தை பொறுத்து 1ம் வாதி ரேவதி பெயரில் மற்றும் சார் பதிவாளர் பெயரில் 1ம் வாதி ரேவதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என்று அறிவிக்க கோரி திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 107/2013 தாக்கல் செய்தேன் என்றால் சரி.

2. அந்த வழக்கில் நான் ஏற்படுத்திய கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று கைரேகை நிபுணர் பரீட்சைக்கு சென்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கு முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரி. நான் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கு 28.1.2025 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கான காலவரையும் முடிந்து விட்டது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல் முறையீட்டு வழக்கு

விவரங்கள் தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் உண்மை தன்மையை பொறுத்து அசல் வழக்கு எண் 107/2013–ல் விடை காணப்பட்டு விட்டதால் அதை பொறுத்து இந்த வழக்கில் மீண்டும் விசாரணை ஏற்படுத்த வேண்டியதில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உரிய வீட்டு வரி ஒன்னாம் வாதி பெயரில் மாறிவிட்டது என்றால் அவர்கள் மாற்றிவிட்டார்கள். நான்தான் வரி கட்டி வருகிறேன்.தாவா சொத்தை 21.6 2010 ஆம் தேதி சரியான கிரைய தொகையைப் பெற்றுக் கொண்டு ஒன்னாம் வாதியின் பெயரில் கிரயம் செய்து கொடுத்து சுவாதியினும் ஒன்னாம் வாதியிடம் வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சொத்திற்குரிய அசல் உரிமை ஆவணங்கள் என்னிடம் உள்ளதுதாவா சொத்தை ஒன்னாம் வாதிக்கு கிரயம் செய்து கொடுத்த பிறகு இரண்டு வருட காலம் அதில் இருந்து கொள்வதாக நான் கேட்டுக் கொண்டதன் பேரில் ஒன்னாம் வாதி மீண்டும் என்னிடம் சுவாதீனம் கொடுக்கப்பட்டு நான் அனுமதி சுவாதீனத்தில் உள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தை வாடகைக்கு கொடுத்தால் மாத வாடகை என்ன வரும் என்றால் மாதம் ரூ.3000 வாடகை வரும். மாத வாடகை ரூ.6000 வரும் என்றால் சரியல்ல. ஆகையால் தாவா சொத்தை அனுமதி வாதி சுவாதீனத்தை நான் இருந்து வருவதற்காக வாதிகள் தாவாவில் கோரியுள்ள நஷ்ட ஈட்டுத் தொகையை செலுத்த நான் கடமைப்பட்டவள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனத்தையும் வாதிகள் கோரியுள்ளார்கள். அதை ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் தவறு. வாதிகள் கோரியப்படி தாவா தீர்ப்பாக வேண்டும் என்னுடைய எதிர்வாதம் செல்ல தக்கது அல்ல என்றால் தவறு.

தாவா சொத்து ஒன்னாம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்ப்பாகிவிட்டது என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.07 16:55:22 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.